Name of the Newspaper: ...Dinamalar... Date: ...31-5-18...

# 'மெட்ரோ ரயிலில் 100 சதவீதம் பாதுகாப்பான பயணம்'





■ மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள, பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் குறித்து விளக்கிய அதிகாரிகள். இடம்: சைதாப்பேட்டை. ■ சின்னமலை, டி.எம்.எஸ்., வரை இயக்கப்படும் மெட்ரோ ரயில். இடம்: சின்னமலை.

**சென்னை, மே 31–**
'பயணியர், 100 சதவீதம் பாதுகாப்பாக பயணம் செய்யலாம்' என, மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை, விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் போக்குவரத்து நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் இயக்குனர், நரசிம்ம பிரசாத், சுரங்கப்பாதை கட்டுமான பிரிவு, தலைமை பொது மேலாளர், வி.கே.சிங் ஆகியோர், நிருபர்களிடம் நேற்று கூறியதாவது:

விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் வரையும்; விமான நிலையம் – தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், இருவழி மார்க்கத்திலும், தினமும், 510 ரயில் சர்வீஸ்கள் இயக்கப்படுகின்றன.

காலை, 5:55 மணி முதல், இரவு, 10:00 மணி வரை ரயில்கள் இயக்கப்படுகின்றன.

### பாதுகாப்பு

மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை, நிலையம், பிளாட்பாரம், பயணியர் நடமாடும் இடம் மற்றும் ரயில்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிலையத்திலும், இரண்டு போலீசாரும், ஒரு ரயிலுக்கு, இரண்டு போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெண் பயணியர், 100 சதவீதம் பாதுகாப்பாக பயணம் செய்யலாம்.

### வருவாய்

கடந்த, 25ம் தேதி வரை, மெட்ரோ ரயிலில், பயணியர் போக்குவரத்தால், தினமும், 10 லட்சம் ரூபாயும்; வாகன நிறுத்தத்தால், ஒரு லட்சம் ரூபாயும் வருவாய் கிடைத்து வந்தது.

ரயில் போக்குவரத்து, சென்ட்ரல் மற்றும் டி.எம்.எஸ்., வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், தினசரி, ஒரு லட்சம் பேர் பயணம் செய்வர் என, எதிர்பார்ப்பு உள்ளது. இதனால், வருவாய் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

மெட்ரோ ரயில் திட்டத்தில், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம், பெரிய நிலையமாக உள்ளது.

ஷெனாய் நகர் நிலையத்திலும், பல வசதிகளை ஏற்படுத்தி, தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரே டிக்கெட்டில், மெட்ரோ ரயில், மாடி ரயில், மின்சார ரயில் மற்றும், எம்.டி.சி., பஸ்களில் பயணம் செய்வதற்கு ஏதுவாக, ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டம் ஏற்படுத்த, ஆலோசனை நடந்து வருகிறது.

மெட்ரோ ரயிலில், 'டோக்கன்' வாங்கி பயணம் செய்யலாம். ஸ்மார்ட் கார்டில், 10 சதவீதமும், டிரிப் கார்டு மற்றும் குழு கார்டு வசதியில், 20 சதவீத கட்டண சலுகை பெறலாம்.

நிலையங்களில் இருந்து, பயணியர் செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்றுவர, இலவச சைக்கிள் வசதி, கட்டண மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் வசதி, 'ஓலா, உபர்' வாகன வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன.

சைதாப்பேட்டை மற்றும் சென்ட்ரல் மெட்ரோ நிலையங்களில், சூரிய சக்தி மின்சார அமைப்பு நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

### திருவொற்றியூர்

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் பாதை பணி முடிந்து, டிசம்பரில் ரயில் போக்குவரத்து துவங்கப்படும்.

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் பாதை பணி முடிந்து, 2020 மார்ச்சில், ரயில் போக்குவரத்து துவங்கப்படும்.

### இரண்டாவது திட்டம்

மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்தில், மூன்று வழித்தடங்களில், 107.55 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இதற்காக, நிலம் கையகப்படுத்துவது, பாதை வடிவமைப்பு, தொழில்நுட்ப செயல்பாடுகள் குறித்த ஆயத்த ஏற்பாடுகள் துவங்கியுள்ளன.

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஐந்து நாட்களில் 6.40 லட்சம் பேர் பயணம்

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் போக்குவரத்து, கடந்த, 25ம் தேதி நீட்டிக்கப்பட்டது.

இதையொட்டி, 25ம் தேதி முதல், நேற்று முன்தினம் வரை, மெட்ரோ ரயிலில், பயணியர், இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதனால், 25ம் தேதி, 50 ஆயிரம் பேர்; 26ம் தேதி, 1.20 லட்சம் பேர்; 27ம் தேதி, 1.84 லட்சம் பேர்; 28ம் தேதி, 1.12 லட்சம் பேர்; 29ம் தேதி, 1.74 லட்சம் பேர் என, ஐந்து நாட்களிலும், மொத்தம், 6.40 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.